சார்பு நீதிமன்றம், விருதுநகர்

நாள்:17.03.2025

DW5: காளியம்மாள் த/பெ– சின்னமுனியாண்டி

**<u>சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு 3 முதல் 6, 10 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

எனக்கு எழுதப்படிக்க தெரியாது. எனது தகப்பனாருக்கு நான் தான் மூத்த வாரிசு என்றால் சரிதான். எனக்கு பின்னர் 3, 4 பிரதிவாதிகள் மற்றும் வாதி பிறந்தனர். எனக்கு திருமணம் முடிந்து சுமார் 40 ஆண்டுகள் இருக்கும். திருமணம் முடிந்ததில் இருந்து சித்தமநாயக்கன்பட்டியில் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். எனது தகப்பனார் எனக்கு ரூ.2,50,000/- கொடுத்தார் என்றால் இல்லை. எனது தகப்பனார் கிரையம் செய்த விபரம் எனக்கு தெரியும். அது சம்மந்தமாக நான் நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் எடுத்துள்ளேன். தாவா சொத்துக்கள் தவிர எனது தகப்பனாருக்கு வேறு வீடுகளும், வீட்டடி மனைகளும் உள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.2 ல் உள்ள கைரேகை என்னுடையது தான் என்றால் இல்லை. பி.வா.சா.ஆ.2 ல் உள்ள கைரேகை என்னுடையது தான் என்றும், வழக்கிற்காக தற்போது மறுக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி கைரேகை என்னுடையதல்ல என்பதை நிரூபிக்க மனு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தை கூட்டாக நான் அனுபவித்து வருகிறேன் என்பதற்கான பட்டா, தீர்வை, அடங்கல் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது தகப்பனாரிடம் பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தைகிரையம் செய்யும் போது எனது தகப்பனாரிடம் ரூ.2,50,000/- பெற்றுக் கொண்டேன் என்றும், வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம்

அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

7 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை—

எனக்கும், வாதிக்கும் இடையே மனஸ்தாபம் எதுவும் இல்லை. நான் வசிக்கும் ஊருக்கும், வாதிகளின் ஊருக்கும் இடையே சுமார் 20 கிமீ தூரம் இருக்கும். வாதி பெயரில் உள்ள 1/5 சொத்தினை தான் நான் பாகம் கோரியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் இது சம்மந்தமாக நான் எந்த நீதிமன்றத்திலும் பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நானும், வாதியும் கூட்டு சேர்ந்து 7 ம் பிரதிவாதியின் சொத்தை மோசடி செய்ய வேண்டும் என்பதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனக்கு எனது தந்தையுடன் பிறந்த செல்லம்மாள் என்ற அத்தை உள்ளார். அவர்களது வாரிசுகள் பற்றி எனக்கு தெரியாது. காளிமுத்து நாயக்கருக்கு எனது தகப்பனார் மற்றும் செல்லம்மாள் தவிர வேறு வாரிசுகள் இல்லை. காளிமுத்து நாயக்கருக்கு சொந்தமான சொத்துக்கள் பற்றி உயிலோ வேறு ஆவணங்களோ எழுதவில்லை என்றால் சரிதான். காளிமுத்துவின் சொத்துக்களுக்கு செல்லம்மாளும் வாரிசு தான். இந்த வழக்கில் செல்லம்மாளை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் எனக்கு தெரியாது. எனது தகப்பனாருக்கும், செல்லம்மாளுக்கும் வாய்மொழி பாகப்பிரிவினை நடந்ததா என்று எனக்கு தெரியாது. அவ்வாறு வாய்மொழி பாகப்பிரிவினை நடந்திருந்தால் தாவா சொத்திற்கு 1 ம் பிரதிவாதி மட்டும் தான் வாரிசு என்றால் சரிதான். வில்லங்கம் போட்டு பார்த்த போது எனது தகப்பனார் விற்பனை செய்த விபரம் தெரியும் என்று பிராதில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த வில்லங்க சான்றிதழை தாக்கல் செய்துள்ளேனா என்று தெரியாது. நான் வில்லங்க சான்றிதழை தாக்கல் செய்திருந்ததால் நான் என்ன செய்துள்ளேன் என்று

தெரிந்து விடும் என்பதால் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 7 ம் பிரதிவாதியின் சொத்தை அபகரிக்க வேண்டும் என்பதற்காக வாதியுடன் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை ராம்கோ சிமிண்ட்ஸ் நிறுவனம் தான் தற்போது வரை அனுபவம் செய்துவருகிறார் என்றால் சரிதான்.

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை—</u>**

தாவா சொத்துக்கள் அனைத்தும் காளிமுத்து நாயக்கருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். அவர் உயிருடன் இருக்கும் வரை சொத்தை பொறுத்து எந்த ஆவணமும் ஏற்படுத்தி கொடுக்கவில்லை என்றால் சரிதான். தபசில் சொத்தில் நான் சிறுவயதில் இருந்தே அனுபவம் செய்து வருகிறேன். வாதி பவுன்ராஜீம் தபசில் சொத்தினை அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான். வாதி தபசில் சொத்தில் 1/5 பாகம் கோரியுள்ளதில் எனக்கு ஆட்சேபணை இல்லை. வாதி என்னை சந்தித்து எனக்காக சாட்சியம் அளிக்க சொல்லவில்லை.